பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

18 02 2025 12 40
செவ்வாய்க்கிழமை பிற்பகல்

தலைப்புச் செய்திகள்

1. புதுதில்லி வந்துள்ள கத்தார் அமீர் ஷேக் தமீம் பின் ஹமத் அல்தானிக்கு குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று பாரம்பரிய முறையிலான வரவேற்பு அளிக்கப்பட்டது.

2. ஜம்மு-கஷ்மீரில் புதிய குற்றவியல் சட்டங்கள் அமலாக்கம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா ஆலோசனை நடத்தியுள்ளார்.

3. மதுரை, திருச்சியில் டைடல் பூங்கா அமைக்கும் பணிக்கு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

4. தமிழக அரசின் வரும் ஆண்டுக்கான பட்ஜெட் சட்டப்பேரவையில் அடுத்த மாதம் 14ஆம் தேதி தாக்கல் செய்யப்படும் என பேரவைத் தலைவர் திரு. அப்பாவு தெரிவித்துள்ளார்.

5. மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று குஜராத் அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

*<<<<>>>>*

புதுதில்லி வந்துள்ள கத்தார் அமீர் ஷேக் தமீம் பின் ஹமத் அல்தானிக்கு குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று பாரம்பரிய முறையிலான சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் கத்தார் அமீரை வரவேற்றனர்.

பின்னர் அவர் முப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, கத்தார் அமீருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

முன்னதாக நடைபெற்ற இந்தியா - கத்தார் வர்த்தக அமைப்பின் கூட்டத்தில் பேசிய மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், இந்திய தொழில் கூட்டமைப்பான சி.ஐ.ஐ. மற்றும் கத்தார் வர்த்தக சங்கத்திற்கிடையேயும், இன்வெஸ்ட் கத்தார் மற்றும் இன்வெஸ் இந்தியா அமைப்புகளுக்கு இடையேயும் இரண்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருப்பதாக தெரிவித்தார்.

மேலும் இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக கூட்டு நடவடிக்கை குழு அமைச்சர்கள் அளவிலான குழுவாக தரம் உயர்த்தப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவின் எரிசக்தி, கட்டமைப்பு வசதி போன்ற பல்வேறு திட்டங்களில் முதலீடு செய்ய வருமாறும் கத்தார் தொழில் நிறுவனங்களுக்கு திரு. பியூஷ் கோயல் அழைப்பு விடுத்தார்.

<<<<>>>>

ராமகிருஷ்ண பரமஹம்சரின் பிறந்த தினத்தையொட்டி அவருக்கு நாட்டு மக்கள் சார்பில் மரியாதை செலுத்துவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள காணொலிப் பதிவில் அன்னை காளிதேவியின் தெய்வீக காட்சியை நேரில் கண்ட சுவாமி ராமகிருஷ்ண பரமஹம்சர், தனது வாழ்நாள் முழுவதையும் காளிதேவிக்காக அர்ப்பணித்தவர் என தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் காளிதேவியின் உணர்வுகள் பரவியிருப்பதாகவும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உணர்வுகளை மேற்குவங்கத்தில் நடைபெறும் காளி பூஜையின்போது காண முடியும் என்றும், அதுவே ஒட்டுமொத்த நாட்டின் நம்பிக்கையாக உள்ளது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

ராமகிருஷ்ண பரமஹம்சரால் ஈர்க்கப்பட்ட சுவாமி விவேகானந்தர் போன்றவர்களும் இதனை வெளிப்படுத்தி இருப்பதாக திரு. நரேந்திர மோடி தமது காணொலிப் பதிவில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் புதிய குற்றவியல் சட்டங்கள் அமலாக்கம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா ஆலோசனை நடத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஜம்மு-கஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா மற்றும் உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா, ஜம்மு-கஷ்மீரில் புதிய குற்றவியல் சட்டங்கள் சிறந்த முறையில் அமல்படுத்தப்படுகிறது என்று திரு. அமித் ஷா தெரிவித்ததாக கூறினார்.

மேலும் சில அம்சங்களில் காணப்படும் குறைபாட்டை சரி செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்தும் அவர் ஆலோசனை வழங்கியிருப்பதாக திரு. உமர் அப்துல்லா தெரிவித்தார்.

ஜம்மு-கஷ்மீர் யூனியன்பிரதேசம் என்பதால் மத்திய அரசுதான் இந்த சட்டங்களை அமல்படுத்தி வருவதாகவும், புதிய சட்டங்களைப் பற்றி பொதுமக்கள் அறிந்துகொள்ள ஏதுவாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு என்ற முறையில் தாங்கள் பணியாற்றி வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

இந்திய ராணுவ ரகசியங்களை பாகிஸ்தானுக்கு கடத்திய குற்றச்சாட்டின் பேரில் கர்நாடகாவைச் சேர்ந்த இருவர் தேசிய புலனாய்வு முகமையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்மாநிலத்தின் கார்வார் மாவட்டத்திற்கு உட்பட்ட **Vetana Tandel** மற்றும் **Akshay Laik** ஆகிய இருவரும் கார்வாரில் உள்ள கடற்படைத் தளம் குறித்த ரகசியங்களை, அந்த தளத்தில் ஒப்பந்தத் தொழிலாளராக பணியாற்றிய சுனில் என்பவரிடம் இருந்து பெற்று பாகிஸ்தானைச் சேர்ந்த பெண் ஏஜெண்ட் மூலம் அனுப்பியதாக கூறப்படுகிறது.

இவர்களிடம் ஏற்கனவே விசாரணை நடத்திய தேசிய புலனாய்வு முகமை அமைப்பினர், இவர்களது நடவடிக்கையை தொடர்ந்து கண்காணித்து வந்தனர்.

மேலும் ரகசியங்களைக் கடத்தியற்காக இவர்களது வங்கிக் கணக்கில் பணம் செலுத்தப்பட்டிருப்பதும் விசாரணையில் உறுதி செய்யப்பட்டதை அடுத்து அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

பெரு நிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வு நிதி என்ற பெயரில் சுமார் ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு நடைபெற்றதாகக் கூறப்படும் முறைகேடு குறித்து அமலாக்கத்துறையினர் கேரளாவில் இன்று 12 இடங்களில் சோதனை நடத்தியுள்ளனர்.

அம்மாநிலத்தில் உள்ள தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பு தலைவரான கே.என். ஆனந்தகுமார் மற்றும் அனந்துகிருஷ்ணன், அவரது வழக்கறிஞரான காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி லாலி வின்செண்ட் ஆகியோருக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறையின் கொச்சி பிரிவினர் இன்று இந்த சோதனையை மேற்கொண்டனர்.

இந்த முறைகேட்டின் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் அனந்துகிருஷ்ணன், ஸ்கூட்டர், லேப்டாப், தையல் இயந்திரங்கள் போன்ற விலை உயர்ந்த பொருட்களை சந்தை மதிப்பில் பாதி விலைக்கு விற்பனை செய்வதாக பொதுமக்களை ஏமாற்றி, அவர்களிடமிருந்து பெற்ற பணத்தை ஆனந்தகுமாருக்கு மாதம்தோறும் 10 லட்சம் ரூபாய் வழங்கி மோசடி செய்திருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்,,,

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் இன்றும் லட்சக்கணக்கானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷியும் இன்று கும்பமேளாவில் பங்கேற்று புனித நீராடி வழிபட்டார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், கும்பமேளாவில் பங்கேற்கும் பக்தர்களுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

இதனிடையே காசி தமிழ்ச் சங்கமத்தில் பங்கேற்கச் சென்ற சுமார் 200 பேர் நேற்று பிரயாக்ராஜ் சென்று கும்பமேளாவில் பங்கேற்றனர்.

அவர்களுக்கு கும்பமேளா ஏற்பாட்டுக் குழு மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பக்தர்களின் வசதிக்கென கூடுதல் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதுடன், பிரயாக்ராஜுக்கு ஒரு மணி நேரத்தில் 8 விமானங்கள் வீதம் இயக்கப்படுவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மதுரை மற்றும் திருச்சியில் அமைக்கப்படும் டைடல் பூங்காவிற்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக முதலமைச்சர் இந்தப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

திருச்சி பஞ்சப்பூர் பகுதியில் 403 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மதுரையில் மாட்டுத்தாவணி பகுதியில் 314 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் அமையும் டைடல் பூங்காக்கள் மூலம் தலா 6 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் சார்பில் 65 வயதுக்கும் மேற்பட்ட 9 சிறந்த கைவினைக் கலைஞர்களுக்கு 'வாழும் கைவினைப் பொக்கிஷம்' விருதுகளையும், 10 கைவினை கலைஞர்களுக்கு பூம்புகார் விருதுகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் தில்லி தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் கலையரங்க புத்தாக்கப் பணிகளுக்கும், சண்டிகர் தமிழ்மன்ற கட்டட விரிவாக்கப் பணிகளுக்கும் தலா 50 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும் முதலமைச்சர் வழங்கினார்.

<<<<>>>>

தமிழக அரசின் வரும் ஆண்டுக்கான பட்ஜெட் சட்டப்பேரவையில் அடுத்த மாதம் 14ஆம் தேதி தாக்கல் செய்யப்படும் என பேரவைத் தலைவர் திரு. அப்பாவு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வேளாண் பட்ஜெட் மற்றும் நடப்பு நிதியாண்டின் கூடுதல் செலவினங்களுக்கான மானிய கோரிக்கைகளும் இந்தக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட இருப்பதாக கூறினார்.

<<<<>>>>

26 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன்பிரதேசங்களுக்கு உட்பட்ட 152 நகரங்களில் புவி - வான் அறிவியல் சார்ந்த நில ஆய்வு தொடர்பான **Naksha** திட்டத்தை மத்திய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் இன்று தொடங்கி வைக்கிறார்.

இதன் மூலம் நில ஆவணங்கள் பற்றிய துல்லியமான விவரத்தை மக்கள் ஆன்லைனில் தெரிந்துகொள்வதோடு, நகர்ப்புற நில மேலாண்மைக்கும் இத்திட்டம் உதவிகரமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று குஜராத் அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி வதோதராவில் இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

-------------

ப்ரோ லீக் ஹாக்கிப் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆடவர் பிரிவு ஆட்டத்தில் இந்தியா – ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

புவனேஸ்வரில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

முன்னதாக மாலை மணி 5.15க்கு நடைபெறும் மகளிர் பிரிவு ஆட்டத்தில் இந்தியா - ஸ்பெயினை எதிர்கொள்கிறது.

<<<<>>>>